முச்சந்தி முரளி



"அப்போ ஆவது இந்தியாவாலே அழிவதும் இந்தியாவாலே எண்டு சொல்லுங்கோ"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 296

செவ்வாய்க்கிழமை
17 செப்ரெம்பர் 2024

புரட்டாதி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


விஞ்ஞாபனத்தில் திருப்தியில்லாதபோதிலும்

## சஜித்துக்கே ஆதரவு தமிழரசு உறுதியாம்

வவுனியாவில் நேற்று சப்பைக்கட்டு அறிக்கை

**வவுனியா, செப்ரெம்பர் 17**

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எம்மால் பரிசீலிக்கப்பட்ட மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளில் எமது அடிப்படை அரசியல் கோரிக்கைகள் முழுமையாக உள்ளடக்கப்படவில்லை. எனினும், சஜித்பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கை ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு திருப்தியாகக் காணப்படுவதால், அவருக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கோருகின்றோம் - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.**

11

சஜித்தை ஆதரிப்பது என்ற

## தமிழரசின் தீர்மானத்துக்கு சிறீதரன் கடும் எதிர்ப்பு!

வவுனியா, செப். 17

ஜனாதிபதிவேட்பாளர் சஜித்பிரேமதாஸவை ஆதரிப்பது என்ற தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தை தான் எதிர்ப்பதாக நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் முக்கியஸ்தருமான சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

11



## திசைகாட்டி தீர்வில்லை

சொல்கிறார் ரணில்

கொழும்பு, செப். 17

கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களித்த மக்கள் நாடு முகம்கொடுத்த நிலைமையால் வெறுப் படைந்திருப்பர். அதற்கு திசைகாட்டிக்கு

11

## தமிழரின் நிலைப்பாட்டை உணர்த்த ஒன்றிணைக!

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 17

தமிழ் மக்கள் தனித்துவமான பிரச்சினைகளுடன் தங்களுக்கான நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் என முழு இலங்கைத்தீவுக்கும் அகிலத்துக்கும் உணர்ந்த தமிழர்கள் ஒன்றிணையவேண்டும் என்று

12

## மந்துவில் படுகொலைகள் அஞ்சலிப்பு உணர்வுபூர்வம்

முல்லைத்தீவு, செப். 17

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, மந்துவில் படுகொலையின் 25ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதியன்று மந்துவில் சந்திப் பகுதியில் இலங்கை

11

## 13 வயதுச் சிறுவன் உயிர்மாய்ப்பு

அலைபேசிப் பாவனையே காரணம்

யாழ்ப்பாணம், செப். 17

யாழ்ப்பாணம் - பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த 13 வயதுச் சிறுவன் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளான்.

11

## ஜனாஸா எரிக்கப்பட்டபோது ரணிலும் அநுரவும் எங்கே?

கிண்ணியாவில் சஜித் கிண்டல்



கொழும்பு, செப். 17

கொரோனாத் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பது என்ற தீர்மானத்தை கோத்தாபய அரசாங்கம் எடுத்தபோது, ரணிலும் அநுரவும் ஓடியொளித்துக் கொண்டனர் என்று சஜித் பிரேமதாஸ விமர்சித்துள்ளார்.

கிண்ணியாவில் நேற்று

11

தமிழகக் கடற்பரப்பில்

## இலங்கை மீனவர்கள் மூவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், செப். 17

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில், இலங்கை மீனவர்கள் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி கடற்பரப்பில் வைத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

11

## தவறான முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 17

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தவறான முடிவெடுத்து இளைஞர் ஒருவர் தனது உயிரை மாய்த்துள்ளார்.

11

## ஈழ அகதிகளுக்காக வீடு: 30 கோடி ரூபா ஒதுக்கீடு!


சென்னை, செப். 17

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வீடுகளை அமைப்பதற்காக, தமிழக அரசு 30 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கொட்டப்பட்டு முகாமிலேயே இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன. 470 வீடுகளை முதற்கட்டமாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ-ம-6)

## ஈழத்தமிழர்களைக் கொல்வதற்காக கோடிகளைக் கொட்டியது இந்தியா

சீமான் ஆவேசம்



சென்னை, செப். 17

இலங்கைத் தமிழர்களைக் கொல்ல இந்தியப் பிரதமர்கள் பல கோடிகளை வட்டியில்லாக் கடனாகக் கொட்டிக் கொடுத்துள்ளனர் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுவதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தபோதே, இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பிலும் சீமான் பேசியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்தது இந்திரா காந்திதான் என்பது

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமையை வென்றெடுக்க தமிழ்மக்களே கைகோருங்கள்

## ஐ.தே.கட்சி அழைப்பு

**கொழும்பு, செப். 17**

**வாக்குரிமையே மக்களின் ஜனநாயக ஆயுதம். அந்த ஆயுதத்தை நாட்டின் முன்னேற்றத்துக்காகவும், நமது முன்னேற்றத்துக்காகவும் பயன்படுத்துவோம். உரிமைகளையும் அபிவிருத்திகளையும் இலகுவாக வென்றெடுக்க தமிழ் பேசும் மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினுடைய வெற்றியின் பங்காளிகளாக வேண்டும்.**

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி அமைப்பாளர் சு. ஆனந்தகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள் நெருங்கிவிட்டது. இம்முறை வாக்காளர்கள் அனைவரும் தமது வாக்கை கட்டாயம் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் இது நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்ற தேர்தல். வரிசை யுகத்தில் நின்று வலி சுமந்த நாள்களை நாம் மறந்துவிடக்கூடாது. இன்று இயல்புநிலை உள்ளதெனில் அதற்கு ஜனாதிபதியே காரணம். எதிரணி வேட்பாளர்கள் சுதந்திரமாக அரசியல் செய்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்கிக்கொடுத்தவரும் அவரே. எனவே, உங்கள் வாக்கைச் சரிவரப் பயன்படுத்துங்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச)



# வேட்பாளர் ம.திலகராஜ் யாழ்ப்பாணத்தில் பரப்புரை

யாழ்ப்பாணம், செப்.17

சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் வடமாகாணத்துக்கான தேர்தல் பிரசாரத்தை நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்தார்.

கடந்தகால கசப்பான விடயங்களை களைந்து இரண்டு சமூகங்களுக்குமிடையில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் சார்ந்த கருத்து முரண்பாடுகளைக் களைந்து எவ்வாறு கடந்தகால தலைவர்கள் செயற்பட்டார்களோ அவ்வாறு இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகளை மீள எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் சகோதர சிங்கள மக்களுடன் எப்படி ஐக்கியமாக வாழலாம் என்பதற்கான உடன்பாடுகளைக் கண்டறிவோம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-ரி-113)

# அநுர வந்தால் வரிசை யுகமே

## ரிஷாத் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 17

அநுர ஆட்சிக்கு வந்தால், ஆறு மாதங்களில் மீண்டும் வரிசை யுகம் ஏற்படும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, நிந்தவூரில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்திலே அவர் இதனைத் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மிக முக்கியமானது. ரணில் வெல்லப் போவதில்லை. சஜித் பிரேமதாஸவின் வெற்றி உறுதியாகிவிட்டது. எனவே, அநுரவுக்கு வாக்களிப்பதும் வீண்.

ஊழல்வாதிகளையும் இனவாதிகளையும் பாதுகாக்கும் ரணிலால் நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# நாட்டைப் பிளவுபடுத்த இடமளிக்கமாட்டோம்

## மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, செப். 17

தேசியம், பௌத்தம் பற்றி நாமல் ராஜபக்ச மாத்திரமே பேசுகிறார். ஏனைய வேட்பாளர்கள் புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்துவது பற்றிப் பேசுகிறார்கள். எக்காரணிகளுக்காகவும் நாட்டைப் பிளவுபடுத்த நாங்கள் இடமளிக்கப் போவதில்லை.

-இவ்வாறு அம்பாறையில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டின் தேசிய பாதுகாப்பையும், ஒருமைப்பாட்டையும் நான் உறுதிப்படுத்தினேன். அபிவிருத்திகளை துரிதமாக மேற்கொண்டு தேசியப் பொருளாதாரத்தை மேம்படுத்தினேன். 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எம்மை ஊழல்வாதிகளாக சித்தரித்து அதிகாரத்தை கோரியவர்கள் இம்முறையும் அதிகாரத்தைக் கோருகிறார்கள். தேசியத்தை பாதுகாப்பதற்கு அனைவரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும் - என்றார். (ச)

# வீடமைப்புத்திட்டத்தை மீள ஆரம்பிப்போம்

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, செப். 17

நான் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது நாடளாவிய ரீதியில் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்தேன். கோத்தாபய ராஜபக்ச அதிகாரத்துக்கு வந்த உடனே அவற்றை நிறுத்தியதோடு, ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியும் கோத்தாபயவின் அடித்தளத்தில் சென்று அந்த வீடமைப்புத்திட்டங்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார். அந்த வீடமைப்புத்திட்டங்களை மீளவும் ஆரம்பித்துச் செயற்படுத்துவேன்.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்த காணிகள் தற்பொழுது காடாகியிருக்கின்றன. அந்தக் காணிகளை மீளப் பெற்றுக்கொடுப்பதோடு, தொழில் இல்லாத இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டங்களையும் ஆரம்பிப்போம். இன, மத, குல பேதங்களின்றி முழு நாட்டையும் அபிவிருத்தி அடையச் செய்யும் செயற்பாடுகளையும் முன்னெடுப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# அதிகாரத்தைப் பகிர்வதால் தமிழர் பிரச்சினை தீராது

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, செப். 17

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரப் போவதில்லை. பிரச்சினைக்கு அரசியல் வாதிகளுக்கு அதிகாரம் வழங்குவது அல்ல தீர்வு என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழில் மொழிப்பிரச்சினை உள்ளது. அரசாங்க நிர்வாகத்தில் தமிழ்மொழியை முறையாக நடைமுறைப்படுத்தவேண்டும். டிஜிற்றல் மயமாக்கல் நடவடிக்கை மூலம் இதனை இலகுபடுத்தலாம். நாட்டு கலாசாரத்தைப் பாதுகாத்தல், பூகோள சவால்களை எதிர்கொள்ளுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் - என்றார். (ச-44)



# புதிய புரட்சியில் கைகோருங்கள்

கொழும்பு, செப். 17

மாற்றத்தைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. அதற்கு ஒரு நடைமுறைச் சாத்தியமான திட்டம் தேவை. 5 வருடங்களுக்குள் இந்த நாட்டின் பொருளாதாரத்தில் புரட்சியை ஏற்படுத்தி புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம். புரட்சியொன்றை மேற்கொள்வதற்கே ஆணையைக் கேட்கிறேன்.

-இவ்வாறு கண்டியில் இடம்பெற்ற ரணிலால் இயலும் வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படப் போகும் சேதத்தை நான் முன்கூட்டிக் குறிப்பிட்டேன்.

ஆனால் அதை யாரும் ஏற்கவில்லை. நாம் சொன்னது போல் இந்த நாட்டின் பொருளாதாரம் சரிந்தது.

2022இல் பொருளாதாரம் சரிந்த போது நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். இக்கட்டான காலங்களில் இந்த நாட்டு மக்களை வாழ வைப்பதற்காக கடினமான முடிவுகளை எடுத்தேன்.

இப்போது சஜித்தும், அநுரவும் பொருட்களின் விலையைக் குறைப்பதாக சொல்கின்றனர். சலுகைகள் வழங்கப்படும் என கூறுகின்றனர்.

அஸ்வெசும, உறுமய ஆகிய திட்டங்களை செயல்படுத்தி சமூக புரட்சியை செய்து வருகிறேன். இந்தப் புரட்சியை யாரும் செய்யவில்லை. இந்தப் புரட்சியில் கலந்துகொள்ள அனைவரையும் அழைக்கிறேன்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் திருப்புமுனை

# நிதி மோசடியாளர்கள் நாட்டிலிருந்து 'எஸ்கேப்'

கொழும்பு, செப். 17

**நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் யாரும் எதிர்பாராத வகையில் திருப்புமுனைகள் ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், வர்த்தகர்கள் மற்றும் பலர் நாட்டை விட்டு இரகசியமாக தப்பிச் செல்லத் தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கடந்த அரசாங்கங்களின் போது பெரும் நிதி மோசடிகள், சட்டவிரோத பணப் பரிவர்த்தனைகள், கொலைகள், ஆட்கடத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களே இவ்வாறு தப்பிச் செல்லத் திட்டமிட்டுள்ளனர்.

நாட்டை விட்டு தப்பிச் செல்லத் திட்டமிட்டுள்ள சில அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள், நாட்டில் உள்ள தமது சொத்துகள், தொழில்கள் மற்றும் சொத்துகளை விற்றுப் பணமாக மாற்றி வருவதாகவும் தெரியவந்துள்ளது. சட்டவிரோதமான உண்டியல் பணப் பரிவர்த்தனைகள் மூலம் தாங்கள் செல்லவிருக்கும் நாடுகளுக்கு ஏற்கனவே பணத்தை அனுப்பியுள்ளதாகவும் தெரியவருகிறது. (ச)



## வட்டுக்கோட்டைக் கிளை ஆதரவு அரியநேந்திரன் நன்றிகூறல்

யாழ்ப்பாணம், செப். 17

தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளை எடுத்த தீர்மானத்துக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பொதுவேட்பாளர் பா. அரியநேந்திரன், வட்டுக்கோட்டை தொகுதிக்கிளை தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவனை கோப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போது தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து ஈ.சரவணபவன் வரவேற்று மரியாதை செலுத்தியிருந்தார். (ச-25,100)

## ஈரோஸ் கட்சி சஜித்துக்கு ஆதரவு

கொழும்பு, செப். 17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க முடிவு செய்திருப்பதாக ஈரோஸ் ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளது.

எமது கட்சி வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை இணைத்துச் செயற்படும் அரசியல் கட்சி என்ற அடிப்படையில் அனைத்து மக்களின் நலன்களையும் கருத்துகளையும் முன்னிறுத்திய நிலைப்பாட்டை எடுத்துள்ளோம்.

எமது முடிவு ஒரு கனதியான விடயமாக உள்ளது என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. (ச)

## கட்சி அலுவலகங்கள் அதிகளவு முளைப்பு

கொழும்பு, செப். 17

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களில், தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் அநுரகுமார திஸாநாயக்கவே அதிக எண்ணிக்கையிலான கட்சி அலுவலகங்களை நிறுவியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. தேசிய மக்கள் சக்தி வேட்பாளருக்காக நாடு முழுவதும் 4 ஆயிரத்து 980 கட்சி அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆயிரத்து 13 கட்சி அலுவலகங்களும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்காக 3 ஆயிரத்து 872 கட்சி அலுவலகங்களும் அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதற்கமைய, மூன்று பிரதான வேட்பாளர்களுக்காக நாடு முழுவதும் சுமார் பத்தாயிரம் கட்சி அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ச)

## போதைக்கு அடிமையான பெண்களுக்கு புனர்வாழ்வு

வவுனியாவில் நிலையம் திறப்பு

கொழும்பு, செப். 17

போதைப்பொருளுக்கு அடிமையான பெண்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு ஒரு விசேட புனர்வாழ்வு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிலையம் வவுனியா பகுதியில் அமைந்துள்ளது. இங்கு 100 பெண்களுக்கு புனர்வாழ்வு அளிக்கமுடியும். நீதிமன்ற உத்தரவுக்கமைய போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள பெண்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படும். போதைப்பொருளுக்கு அடிமையான பெண்களை புதிய புனர்வாழ்வு மையத்துக்கு புனர்வாழ்வுக்கு பரிந்துரைக்குமாறு நீதிச் சேவை ஆணைக்குழு அனைத்து நீதிபதிகளுக்கும் அறிவித்துள்ளது. (ச)

## பொதுவேட்பாளருக்காக பிரிட்டனில் ஊர்திப் பவனி

லண்டன், செப். 17

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரனுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் பிரித்தானிய தமிழ்த் தேசிய அமைப்புகளினால் ஊர்தி எழுச்சிப்பயணம் ஒன்று நடத்தப்பட்டது.

'நாமும் இணைந்தால் பலமே' என்ற தொனிப்பொருளில் தியாக தீபம் திலீபன் நோன்பிருந்த ஆரம்ப நாளான நேற்று இந்த ஊர்திப்பவனி முன்னெடுக்கப்பட்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரித்தானியக் கிளையின் முக்கியஸ்தர் கேதீஸ்வரன் தலைமையில் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. (ச-027)






**நக்குண்டார் நாவிழந்தார் எண்டு எங்கட பழைய ஆக்கள் சொன்னது ஒரு பிழையுமில்லை. ஆரெல்லாம் இப்பிடி நக்குண்டு நாவிழந்தவை எண்டதை எலக்சன் காலத்தில தான் வடிவாக் கண்டுபிடிக்கலாம் இவ்வளவு காலமும் நாங்கள் சிங்கள வேட்பாளர்மாருக்கு சப்போர்ட் பண்ணிப்போட்டு அனிலேறு விட்ட நாயள் மாதிரி நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்ததை விட நாங்கள் உருப்படியா ஒண்டுமே செய்யேலை. அதால இந்தமுறை எந்தச் சிங்கள வேட்பாளர் எங்கட உரிமையளைப் பற்றி - முக்கியமா சமஷ்டித்தீர்வைப் பற்றி- தெளிவா தன்ர தேர்தல் விஞ்ஞாபனத்தில சொல்றாரோ அவரோட கதைச்சு எழுத்துமூலமா உத்தரவாதம் வாங்கிப்போட்டுத்தான் அவரை ஆதரிக்கிறது எண்டு வீட்டுக்கட்சி முடிவெடுத்திருந்தது. ஆனால் சட்டம்பியார் ரீம் குறுக்கால ஓடி, ரெலிபோனோட ஒரு டீல் போட்டுட்டுது. அதால எப்பிடியாவது சுத்திவளைச்சு, வீட்டுக்கட்சியை ரெலிபோன் பக்கமா கொண்டுவர குத்திமுறிஞ்சவை. ஆனால் இப்பிடி இவை செய்துகொண்டிருக்கேக்கையே திருகோணமலை மாவட்டக்கிளை, கிளிநொச்சி மாவட்டக்கிளை எண்டு ஒவ்வொரு கிளையா தாங்கள் பொது வேட்பாளருக்குத்தான் ஆதரவு எண்டு தீர்மானம் போட, சட்டம்பியார் ரீமுக்கு வயித்தைக் கலக்கத் தொடங்கிட்டுது. அதால முக்கியமான ஆக்கள் வரஏலாத நாளில அவசரமா மத்திய குழுவைக் கூடி, 'ரெலிபோனுக்குத் தான் எங்கட சப்போர்ட்' எண்டு அறிவிச்சுப் போட்டினம்.**

**அந்த அறிவிப்புக்கு பிறகு சனங்களிட்ட தங்கட முடிவைப் பற்றி நல்லவிதமா கருத்து வருமெண்டு பார்த்திருக்கினம். ம்கூம். சனங்கள் இப்ப வீட்டுக்கட்சியையே மதிக்கிறேலை, அந்த லட்சணத்தில அவையில ஒரு குரூப் எடுத்த முடிவை மட்டும் ஆராத்தி எடுத்து வரவேற்பினமோ? 'நீங்கள் என்ன முடிவையும் எடுங்கோ, ஆருக்கு வாக்களிக்கோணும் எண்டு எங்களுக்குத் தெரியும்' எண்ட கணக்கிலதான் சனங்கள் நடந்து கொள்ளுகினம். இப்பிடிச் சனங்கள் தங்கட சொல்லைக் கேக்காமல், விட்டேத்தித்தனமா இருந்தால், எந்த முகத்தோட சட்டம்பியார் ரீம் ரெலிபோன்காரரைச் சந்திச்சு, தங்கட டீலை முடிக்க ஏலும்? அதால ரெலிபோன் காரருக்கு சப்போர்ட்டா கூட்டம் கூட்டுவம் எண்டு நினைச்சிருக்கினம். ஆனால் அதுக்கும் சனம் வராட்டி தங்கட பொட்டுக்கேடு வெளிக்கிட்டிடும் எண்டதால, ரெலிபோன் காரரிண்ட கூட்டத்தில போய் நாங்கள் தலையைக் காட்டுவம் எண்டு சட்டம்பியார் ரீம் முடிவெடுத்திருக்கினம். எல்லாரும் சட்டம்பியார்தான் வீட்டுக்கட்சியை வித்துக்கொண்டிருக்கிறார் எண்டு நினைக்கினம். ஆனால் அவரை விடவும் கிருமி மாதிரி வீட்டுக்குள்ள கூட இருந்தே குழிபறிக்கிற ஆள் இருக்குது. அந்தாள் தான் முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டு மாகாண சபையைக் குழப்பினது. அந்தக் குழப்பத்தோடதான் வீட்டுக்கட்சிக்கையும் முதன்முதலா விரிசல் விழுந்து. இப்ப இடியிற கட்டத்துக்கு வந்திட்டு. அங்காலையும் பாடி, இஞ்சாலையும் பாடி , வீட்டுக்கே வேட்டு வைக்கிற அந்தாளும் சட்டம்பியாரோட ரெலிபோன்காரரின்ர மேடையில ஏறியிருக்கிறார்.**

**இந்தக் கூட்டத்தில சட்டம்பியார் தன்ர பேர்ல பேப்பர்மாதிரி ஒரு நாலுபக்க நோட்டீஸை சனத்திட்ட குடுத்திருக்கிறார். 'பாத்தியளோ உங்களுக்காக நாங்கள் நாலு பக்கத்தில பேப்பர் எல்லாம் அடிச்சு சனத்தை வளைக்கிறம்' எண்டு ரெலிபோன்காரருக்கு படம் காட்டத்தான் உந்த நோட்டீஸ் விளையாட்டாம். கூட்டம் முடிய அந்த நாலுபக்க நோட்டீஸ் எல்லாம் கிழிச்சு செல்லமுத்து விளையாட்டரங்கு முழுக்க பறந்து திரிஞ்சதாம். சில நோட்டீஸ்களுக்குமேல செருப்பை வைச்சிட்டு சனம் போயிருக்குதாம். நோட்டீஸை அடிச்சு நோண்டியானது தான் மிச்சம்.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், செப். 17

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்த திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமாகி இடம்பெறும்.

திருவாசகமுற்றோதல்நிகழ்வில்அனைத்துஅடியவர்களையும் கலந்து கொள்ளுமாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் கேட்டுள்ளார். (ச-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும் . விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே இருக்கும். புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**இடபம்:** அசதியும் சோர்வும் நிறைந்திருக்கும். மகிழ்ச்சியுமாகக் காணப்படுவீர்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பணியாளர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். செயல்களில் துணிச்சல் வெளிப் படும். சிறுசிறு பிணக்குகள் மறையும். புதிய முயற்சி களைத் தொடங்குவது நல்லது. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். திடீர்ச் செலவுகள் ஏற்படலாம். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். விற்பனை யும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும். அம்பி கையை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** நிதானம் தேவை. வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமை அவசியம். செலவு செய்யவேண்டிவரும். வியாபாரத்தில் சில சங்க டங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

**கன்னி:** சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும் நல்லநாள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். காரியம் அனுகூலமாகும்.

**துலாம்:** குடும்பத்தினரால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். கையிருப்பு கரையும். எதிர்பார்த்த காரியம் முடிவடையும். பணிகளைக் குறித்த நேரத்தில் முடிப்பீர்கள் உழைக்க வேண்டி இருக்கும். ஆஞ்சநேயரை வழிபடுவது சிறப்பு.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகம் நிறைந்திருக்கும் நல்ல நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்ற வர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம்.

**மகரம்:** சற்று பொறுமையுடன் செயற்படவேண் டிய நாள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கனிவாக நடந்துகொள்வீர்கள்.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியநாள். திடீர்ச் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். விற்பனை வழக்கம்போலவே இருக்கும். பணியாளர்களுக்காகச் செலவு செய்ய நேரிடும்.

**மீனம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறை வேற்றி மகிழ்வீர்கள். எதிர்பாராத பணவரவு டன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். நீண்ட நாள்களாகத் திரும்பிச்செலுத்த நினைத்த கடனைத் தந்து முடித்து நிம்மதியடைவீர்கள்.




வல்லியாம் ஆச்சி வேண்ட
வந்தநீ மகவாய் அன்று;
எல்லையில் மீனாய் ஏகி;
எடுத்ததும் ஆழி ஆகி;
தொல்வினை நீக்க என்றே
தோன்றினாய் வல்லி மண்ணில்,
வல்லவுன் அருளை ஊட்டி
வளந்தரு வண்ணா வாழி!

மச்சமாய் வந்தாய்; வல்லி
மண்ணிலே வைக்க ஆழிப்
பச்சைமால் என்ன நின்று
பரிந்தருள் செய்தாய்; வேலை
உச்சமாய்ப் பொங்கி வந்து
உன்னடி நாட அன்று
'அச்சமே வேண்டாம் உன்னில்
ஆடநான் வருவேன்' என்றாய்...!

பாம்பணை பள்ளி கொண்டாய்!
பவனியும் அதுவாய்க் கொண்டாய்!
காம்பணை முகிலின் நீலக்
கருந்திரு மேனி கொண்டாய்!
நாம்பணிந் தேத்தும் நல்ல
நலந்திகழ் மூர்த்தம் கொண்டாய்;
பூம்பனை சூழும் வல்லி
புரமதில் கோயில் கொண்டாய்!

சார்ந்தவுன் மருகோன் நல்ல
சந்நிதி ஆற்றைக் கொண்டான்!
ஈர்த்தணை இன்பா நீயோ
இந்துமா கடலைக் கொண்டாய்!
ஆர்ந்தெழு அன்பர் நாமோ
அணைமல நதியைக் கொண்டோம்!
ஊர்ந்தமா நாகம் பாயாய்
உறையுமா யவனே வாழ்க!

ஞாயிறு தோறும் நல்ல
நலந்திகழ் பூசை ஏற்பாய்!
ஆயிரம் நாமம் சொல்லி
அடுப்பிலே பானை வைத்து
'தா'யிது வைத்தேன் என்று
தளிசைக ளோடு சாதம்
காயிலைக் கறியும் வைத்தால்
களித்துமே உண்பாய்! காப்பாய்!

நெய்யதை உண்பாய்; பக்தி
நேயமும் உண்பாய்; என்றும்
மெய்யதைத் தின்னச் சூழும்
மேல்வினை யெல்லாம் தின்னும்
வெய்யவோர் ஆழிக் காரா!
வேய்ங்குழல் கீதக் காரா!
உய்யமா வல்லி மண்ணில்
உதித்ததோர் மாயக் காரா!

குடமதை உடைத்து வெண்ணெய்
குளித்துமே சிரித்து உண்டாய்!
படகதில் குகனும் ஓட்டும்
பரிவதும் கொண்டாய்! பால
நடமதை ஆடிப் பாம்பின்
நஞ்சதும் நலியக் கண்டாய்!
கடலையும் போகச் சொல்லி
கனிந்துநீ போக்கும் கொண்டாய்!

மாயவா; மாலா; மன்னும்
மாமறைப் பொருளா; மலரும்
சேயவ னான செவ்வேள்
செம்மைசேர் மாமா; அன்று
ஆயவ ரோடு நின்ற
அற்புதச் செல்வா! இன்று
பாயது பாம்பாய் வல்லிப்
பதியிலே படுப்பாய் வாழி..!

வங்கமா கடலில் நீயும்
வாழ்த்தொலி யோடு மூழ்க;
அங்கமாய் உன்னைச் சூழ்ந்த
அன்பரும் 'அரியே' என்ன;
தங்கமாய்க் கருடன் வானில்
தக்கவோர் காட்சி நல்க;
எங்களைக் காப்பேன் என்று
எழுந்தபே ரலையில் சொல்வாய்!

'மாயவா...!' என்ற ழைத்தால்
மகிழ்வொடு அன்பும் பொங்க,
காயங்கள் போக்கி ஆளும்
கருணையாம் முதல்வன்; காக்கும்
தாயவன் ஆன நல்ல
சக்கரத் தாழ்வான்; பாரில்...
பாயவே அருளாம் வெள்ளம்
பவனியே கொண்டான்! வாழ்க...!

எண்ணமாய் ஆனாய்; இன்ப
எழுத்தெலாம் ஆனாய்; உந்தன்
மண்ணதைத் தொட்டால் இந்த
மானிடப் பிறவி உய்க்கும்
விண்ணவன் ஆனாய்; எங்கள்
விரதனும் ஆனாய்; எந்தன்
கண்ணிலே தோன்றும் நல்ல
கவிச்சுடர் ஆனாய் வாழி!

**கலாநிதி செ.சுதர்சன்**
*தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்*

# கைது

கிளிநொச்சி, செப். 17

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முரசு மோட்டைப் பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் மீது கடந்த வாரம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்று திங்கட்கிழமை கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (த)



# அராலி பிறிமியர் லீக் பிளாஸ்ரர் சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.17

அராலி விளையாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சிறிகரனின் நண்பர்களின் நிதிப்பங்களிப்பில் பேரவையின் இணைப்பாளர் ப.தர்மகுமாரன் தலைமையில் விளையாட்டு வித்தகன் அமரர் இ.சிறிகரன் நினைவுக்கிண்ண அராலி பிறிமியர் லீக் சுற்றுப்போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. போட்டியில் அராலி பிளாஸ்ரர் அணியும் அராலி பன்ராஸ் அணியும் மோதிக்கொண்டன. இதில் அராலி பிளாஸ்ரர் அணி வெற்றி பெற்று கிண்ணத்தைத் தனதாக்கியது. நிகழ்வுக்கு அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரியின் பிரதி அதிபர் ஜெகதீஸ்வரன், சங்கானை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் கபிலன், முன்னாள் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## சப்பாத்துகளை விடவும் கால்கள்தான் பிரதானம்

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளையடுத்து, தடை செய்யப்பட்டிருந்த வாகன இறக்குமதிகளுக்கு மீண்டும் அனுமதி வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கின்றது 'ரணில் அரசாங்கம்'. அத்தியாவசியத் தேவைகளைக் கருத்திற்கொண்ட (பொதுப்போக்குவரத்து) வாகன இறக்குமதி ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும் என்றும், அதன் பின்னர் படிப்படியாக ஏனைய வாகனங்கள் இறக்குமதி செய்யப் படும் என்றும் ரணில் அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. தற்போதைய முன்மொழிவுகளின் அடிப்படையில் இன்னும் நான்கே மாதங்களில் அதாவது 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் அனைத்துவிதமான (பொதுப் போக்குவரத்து, தனியார், சொகுசு, அதிசொகுசு) வாகனங்களும் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இலங்கையில் தற்போது தேர்தல் பரபரப்புகள் அதிகரித்துள்ளன. எப்படியாவது பெரும்பான்மையைப் பெற்றுவிட வேண்டும் என்று வேட்பாளர்கள் பம்பரமாகச் சுழன்று தீவிர பரப்புரைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். மக்களின் கவனம்கூட தேர்தலை மையப்படுத்தியதாகவே அமைந்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே சத்தமின்றி வாகன இறக்குமதிகளுக்கான தடை நீக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தடை நீக்கத்துக்கான பின்னணியும், இதனால் ஏற்படப் போகும் பாதிப்பும் மிகப்பெரியது. ஆதலால், ரணில் அரசாங்கம் திட்டமிட்டு இந்தக் காய்நகர்த்தலை முன்னெடுத்திருக்கின்றதா? என்ற நியாயமான சந்தேகங்களும் எழவே செய்கின்றன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் பொருளாதாரம் நலிவடைந்தபோது, பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதற்காகக் மேற்கொள்ளப்பட்ட மிகப்பிரதானமானநடவடிக்கைகளில் வாகன இறக்குமதிக்கான தடையும் ஒன்றாகவே காணப்பட்டது. வாகனங்களின் இறக்குமதிக்காகச் செலவிடப்படும் டொலர் மிக அதிகமாக இருந்ததால், டொலர் வெளிச்செல்லும் அந்தப் பாதையை (வாகன இறக்குமதியை) அடைத்துவிட்டு, அந்தப் பணத்தில் எரிவாயு, எரிபொருள் இதர அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளாகநடைமுறையில் உள்ள இந்தத் தடையால் இலங்கை அடைந்த நன்மையோ ஏராளம். இவ்வாறிருக்கையில் தேர்தல் காலத்தில் எவர் வேண்டுமானாலும் ஆட்சிக்கு வரலாம் 'என்றிருக்கும் பின்னணியில், வாகனத் தடைகள் நீக்கப்பட்டதன் மர்மம் என்ன? 'ஜனாதிபதி ரணில் தேர்தலில் தோல்வியடைந்து, அநுரவோ அல்லது சஜித்தோ புதிய ஜனாதிபதியாக ஆட்சியைப் பொறுப்பேற்றால், சுமூகமான பொருளாதாரச் சுழற்சியை ஏற்பட விடாது நெருக்கடியை வழங்குவதற்கான திட்டம்தான் இதுவா?' என்ற கேள்வி இங்கெழுவது இயல்பல்லவா?

வாகன இறக்குமதிகள் இல்லாமல், நாட்டில் வாகனங்களில் பெறுமதி அதிகரித்துச்செல்கின்றனதான். முன்பெல்லாம் புதிதாய் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குச் செலவிடும் தொகைக்கு தற்போது பாவித்த வாகனங்கள் கிடைப்பதுகூட அரிதான விடயமாக மாறியுள்ளது. ஆனால், சப்பாத்துகளுக்காக அழுவதற்கு முன்னர் கால்களைப் பற்றியல்லவா சிந்திக்கவேண்டும். இரண்டாண்டுகளுக்கு முன்னர் இலங்கையெங்கும் நீண்டிருந்த வரிசைகள் வாகனங்களுக்காகவோ அல்லது உதிரிப்பாகங்களுக் காகவோ அல்ல. பசியின் விளைவு அது. இப்படிப்பட்டதொரு நிலையில் ' பொருளாதாரம் மீண்டும் மீளாமலும் போலுள்ள பின்னணியில்' வாகனங்களை இறக்குமதி செய்வதென்பது தேடிச்சென்று இருளில் இறங்கிக் கொள்ளும் அபத்தமன்றி வேறில்லை.




## பால்மா கொள்வனவுக்கு ரூ. 200 மில்லியன் ஒதுக்கீடு



கொழும்பு, செப். 17

**அரசாங்கத்துக்குச் சொந்தமான மில்கோ நிறுவனத்தின் நாளாந்த உற்பத்தி அதிகரித்துள்ளதையடுத்து, தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள 2 இலட்சம் மெற்றிக் தொன் பால்மாவை கொள்வனவு செய்வதற்கு, 200 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.**

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த விடயத்தை தெரிவித்தார்.

நாளாந்த பால் சேகரிப்பு 50,000 லீற்றரிலிருந்து இரண்டு இலட்சமாக அதிகரித்துள்ளது.

குறிப்பாக, பால் சம்பந்தப்பட்ட பொருட்கள் உற்பத்தி, பால் கொள்முதல் செய்து வந்த பெரும்பாலான நிறுவனங்கள் தற்போது பால் கொள்முதல் செய்வதை நிறுத்திவிட்டதனால், பால் பண்ணையாளர்களுக்கு சொந்தமான பாலை மில்கோ நிறுவனமே கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## ஏற்றுமதி, இறக்குமதி வருமானம் ஏற்றம்!

கொழும்பு, செப். 17

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் மற்றும் இறக்குமதி செலவு அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஏற்றுமதி வருமானம் 5.6 சதவீதமும், இறக்குமதி செலவு 9.1 சதவீதமும் அதிகரித்துள்ளது. அதன்படி, கடந்த 7 மாதங்களில் எரிபொருள் இறக்குமதிக்காக 2 ஆயிரத்து 548 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது.

இரண்டாம் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் முன்னெதிர்வு கூறப்பட்டதை விடவும் மிகவேகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## 'யுக்திய' 726 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 726 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 702 ஆண்களும் 24 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து 166 கிராம் ஹெரோயின், 212 கிராம் ஐஸ், மற்றும் 229 கிராம் கஞ்சா ஆகிய போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகபொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ச)

## இலங்கைப் பயணம் அமெ. அறிவுறுத்து

கொழும்பு, செப். 17

ஜனாதிபதித் தேர்தலை கருத்திற்கொண்டு பிரஜைகள் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு இலங்கைக்கான தனது பயண ஆலோசனையை அமெரிக்காவின் இராஜாங்கத்திணைக்களம் புதுப்பித்துள்ளது. இலங்கையில் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால், தேர்தலுக்கு முன்னரோ, தேர்தலின் போதோ அல்லது அதற்குப்பின்னரோ ஆர்ப்பாட்டங்கள் நிகழலாம். (ச)

## சமூக ஊடகங்கள் கண்காணிப்பு

கொழும்பு, செப். 17

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் நிறைவடைந்ததன் பின்னர் சமூக வலைதளங்களூடாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களைத்தடுப்பதற்கு விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## நாளை

18.09.2024

புதன்கிழமை - புரட்டாதி - 02
சுபநேரம் : 04.33 - 06.03
ராகுகாலம் : 12.03 - 01.33

## நாளொரு நல்வார்த்தை

**நீ கவலைகளை சுமந்து கண்ணீர் சிந்துவதை விட, லட்சியங்களை சுமந்து ரத்தம் சிந்து.**

- லெனின் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,500 பொலிஸார் கடமையில் 152 வாக்களிப்பு நிலையங்கள்

## வவுனியா மாவட்டச் செயலர் தெரிவிப்பு

வவுனியா, செப். 17


வவுனியாவில் ஜனாதிபதித்தேர்தல் கடமைகளுக்காக ஆயிரத்து 500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்டச் செயலர் பி.எ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித்தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் வவுனியா மாவட்டசெயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது மாவட்டச் செயலர் பி.எ.சரத்சந்திர கருத்துத் தெரிவிக்கையில், தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அத்துடன் தேர்தல் தினத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைமைகள் தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிஸார்,தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏனைய தரப்புகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 152 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 12 வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்கெண்ணும் மத்திய நிலையமாக வவுனியா சைவப் பிரகாசா மகளிர் கல்லூரி செயற்படவுள்ளதுடன், அதற்கான உரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை தேர்தல்கடமைகளுக்காக ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட பொலிஸார் வவுனியா மாவட்டத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ச-110)



# புதிய ஜனாதிபதியுடன் பயணிக்கத் தயார்

## அமெரிக்கா அறிவிப்பு

கொழும்பு, செப். 17

இலங்கை வாக்காளர்கள் தமது நாட்டை எதிர்காலத்தில் வழிநடத்த தேர்வு செய்யும் வேட்பாளருடன் இணைந்து பணியாற்றுவதற்கு அமெரிக்கா எதிர்பார்த்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஜனநாயக தினத்தைக் குறிக்கும் வகையில் அவர் தனது எக்ஸ் தளத்தில் இதனைப் பதிவிட்டுள்ளார்.

தேர்தல் மூலம் அவர்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பொறுப்புக்கூறல், மனித உரிமைகள், நீதி மற்றும் ஒவ்வொரு தனிநபருக்குமான கருத்து சுதந்திரத்தை உறுதி செய்தல் போன்ற, எந்தவொரு வலுவான மற்றும் நிலையான ஜனநாயகத்தின் கொள்கைகளை இந்த நாள் கொண்டாடுகிறது. இலங்கையின் ஜனநாயகத்துக்கான சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதிப்படுத்துவது மிக முக்கியமான நடவடிக்கை என்றும் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# காற்றாலைத் திட்டம் இரத்துச் செய்வேன்

## அநுர தெரிவிப்பு



கொழும்பு, செப். 17

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் இந்தியாவின் அதானி நிறுவனத் தின் காற்றாலை மின்திட் டத்தை இரத்துசெய்வேன் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் ஊழல்மிகுந்தது இலங்கையின் நலன்களுக்கு எதிராக செயற்படுகின்றது.

அதானி நிறுவனத்தின் திட்டம் அளவு பெரியது என்பதை கருத்தில் கொள்ளும் போது அதன்செலவீனங்கள் குறைவாயிருக்க வேண்டும்.ஆனால் அதற்கு மாறான நிலை காணப்படுகின்றது. நாங்கள் இந்த ஒப்பந்தத்தை நிச்சயமாக இரத்துச்செய்வோம் என்றும் தெரிவித்துள்ளார். (ச)



# ஒற்றுமையை உணர்த்துவோம்

## வாணிபர் கழகம் அழைப்பு!

யாழ்ப்பாணம், செப்.17

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக வாக்களித்து தமிழர்களாக எமது ஒற்றுமையை உலகிற்கு உணர்த்துவோம் என நெல்லியடி வாணிபர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக நெல்லியடி வாணிபர் கழகத்தின் ஆதரவுடன் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற 'நமக்காக நாம்' பரப்புரைக் கூட்டத்தின் போதே அழைப்பு விடுக்கப்பட்டது. பரப்புரைக் கூட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய பொதுக்கூட்டமைப்பை சேர்ந்த செல்வின் இரணியேஸ் மரியாம்பிள்ளை, புலம்பெயர் செயற்பாட்டாளர் பீற்றர், நெல்லியடி வாணிபர் கழக நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி 100)



# மன்னார் அகதிகள் பாப்பரசரிடம் ஆசி

இந்தோனேசியா, செப்.17

புனித திருத்தந்தை கடந்த 2 ஆம் திகதி வத்திக்கானிலிருந்து ஆசியா மற்றும் ஓசியானியாவின் 4 நாடுகளுக்கான 45 ஆவது திருப்பயணத்தை ஆரம்பித்திருந்தார். இதன்போது மன்னார் மாவட்டத்தை சேர்ந்த அகதிகள் குடும்பம் ஒன்று அவரிடம் ஆசிபெற்றுள்ளனர். இலங்கை அகதிகளாக இந்தோனேசியாவில் கடந்த 12 வருடங்களாக வசித்து வரும் மன்னார் மாவட்டத்தின் விடத்தல்தீவு கிராமத்தை சேர்ந்தோரே திருத்தந்தையைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளனர். (ச-25, 213)






# 'பாண்ட்' வாத்தியம் முழங்க நாய்க்கு மரணச்சடங்கு !

## வட்டுக்கோட்டையில் நெகிழ்ச்சிச் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 17

மனிதர்களுக்கு இறுதிச் சடங்கு செய்வது போல் வளர்ப்பு நாய்க்கும் இறுதிச் சடங்கை செய்த சம்பவம் அனைவர் மத்தியிலும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நபரொருவரால் வளர்க்கப்பட்டு வந்த பைசா என அழைக்கப்படும் ரொட்வீலர் இன நாய் 18 வயதை நிறைவு செய்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தது. கடந்த 10 வருடங்களாகத் தனக்குப் பாதுகாப்பை வழங்கிய நன்றிக் கடனுக்காக மனிதர்களுக்குச் செய்கின்ற இறுதிச் சடங்கு போலப் பைசாவுக்கும் இறுதிச் சடங்கை நடத்தி நெகிழ வைத்துள்ளார் பைசாவின் எஜமான். பாண்ட் வாத்தியங்கள் முழங்க, பைசாவின் உடல் வட்டுக்கோட்டை பகுதி எங்கும் இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.


அதன்பின்னர் எஜமானின் காணியில் பைசாவின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த நெகிழ்ச்சிச் சம்பவம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெல்க தமிழ்

சிதறுண்டது போதும்
தேசமாய் ஒன்றிணைவோம்

இனியொரு புதுவிதி செய்வோம்



இம்முறை தமிழர் வாக்கு
தமிழுக்கே என்றெழுவோம்!
சங்குக்கே வாக்களிப்போம்!



தமிழ்ப்பொது வேட்பாளர்

**பா.அரியநேத்திரன்**

-தமிழ் மக்கள்-


# தேர்தலை புறக்கணிக்காது உரிமைக்கு வாக்கிடுவோம்


## திருமலை ஆயர் வேண்டுகோள்

திருகோணமலை, செப். 17

தமிழ் மக்கள் அனைவரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்காது, மனச்சாட்சிப்படி, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் நலனுக்கான குரலாக ஒலிக்கும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்கிடுவோம் என்று திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல் அழைப்பு விடுத்துள்ளார்.

நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் பலரும் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்ற சூழ்நிலையில் தமிழ் மக்கள் சார்பாக பா.அரியநேந்திரன் பொது வேட்பாளராகப் போட்டியிடுகிறார். வடக்கு - கிழக்கு மக்களின் பல்வேறு சிந்தனைகளை, தேவைகளை, கஷ்டங்களை முன்வைத்து பல புத்திஜீவிகள் இணைந்து எடுக்கப்பட்ட முயற்சிகளின் வெளிப்பாடாக இந்தச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் அனைவரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்காது, மனச்சாட்சிப்படி, வடக்கு -கிழக்கு தமிழ் மக்களின் உரிமைகளை வெளிக்கொணரும் வகையில் வாக்குகளைப் பதிவு செய்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-100)


## கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில் 20 . 05 . 1959

இறைவன் அடியில் 15 . 09 . 2024

யாழ். பல்கலைக்கழக நடனத்துறையின் போதனாசிரியர் திரு. இராசையா தனராஜ் அவர்களின் பாசமிகு தந்தையார்

**றெங்கசாமி இராசையா**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


-தலைவர்-
விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள்
கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்
நடனத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.


## பிரசாரத்தில் சிறுவர்கள்

### விசாரணை ஆரம்பம்

எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பிரசாரத்துக்கு குழந்தைகளை பயன்படுத்துவது தொடர்பானமுறைப்பாடுகள் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதுகுறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சிறுவர்களை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது மிகப்பெரும் குற்றமாகும். ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் பல்வேறு வன்முறைகள் பதிவாகி வருகின்றன. இது சிறுவர்களை ரீதியான தாக்கங்களுக்கு உட்படுத்தும். 18 வயதுக்கும் குறைந்த சிறுவர்களைப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதை தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)


## மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 04 . 1946

மறைவு 14 . 09 . 2024

**சுப்பையா நடராஜா**

வன்னியசிங்கம் வீதி, இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் தொட்டியடி விசுவமடுவில் வசித்தவரும் தற்போது வன்னியசிங்கம் வீதி, இணுவில் தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான சுப்பையா நடராஜா கடந்த (14.09.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், மல்லிகாவின் அன்புக் கணவரும், Dr.சுபாசினி (குழந்தை வைத்திய நிபுணர் - தெல்லிப்பளை), ஜெயகாந்தன் (ஆசிரியர் - யூனியன் கல்லூரி), சங்கீதா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. சசிதரன், பிரபாகரன், வத்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ராஜலக்ஸ்மி, செல்வரட்ணம், சரஸ்வதி, தேவநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சீதாதேவி, சண்முகேஸ்வரலிங்கம், தவஞானசரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், யோகநாதன், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சிறீபதி, இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகலனும், இந்திராணி, கமலராணி, யோகராணி, இதயவதி ஆகியோரின் மைத்துனரும், சாகரி, ஜஸ்மிதா, அஜய், அபிராம், கபிலன், அகிலன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இணுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
மகள் - 077 316 4504
மகள்- 077 345 6779

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு.

(CS/1355) J-1



## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 09 . 1942

மறைவு 16 . 09 . 2024

**சின்னத்தம்பி செல்லம்மா**

பன்றிசுட்டான் கண்டாவளையை பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கு, மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லம்மா அவர்கள் நேற்று (16.09.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வள்ளிப்பிள்ளை மண இணையாரின் மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சின்னப்பிள்ளையாரின் மருமகளும், சிவனேசன் (கணேஸ்), குலக்கொழுந்து, சந்திரபூபதி, காலஞ்சென்ற சந்திரமலர் மற்றும் சிவலிங்கம் (வனேஸ்) சிவபாலன் (குணா), விஜயரத்தினம் (சபேஷ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2024) நடைபெற்று, பூதவுடல் ஈமக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


தொடர்பு : 077 5478249


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்க தமிழ்

## சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
**கட்சிகளைக் கடந்து**
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!



X



எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
**வாக்குகள்தான்.**
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்.

தமிழ்ப் பொது வேட்பாளர்

**பா.அரியநேத்திரன்**

இலங்கை மீனவர் தொழிற்சங்கம், வட மாகாணக் கிளை

# இறுதிப் பிரசாரங்கள் நடக்கும் இடங்கள்

கொழும்பு, செப். 17
ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள பிரதான வேட்பாளர்கள் எனக் கருதப்படும் நால்வரின் கடைசி பிரசாரக் கூட்டம் நடைபெறும் இடங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதன்படி சுயாதீன ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிர மசிங்கவின் கடைசி பிரசாரக் கூட்டம் மருதானையிலும், சஜித் பிரேமதாஸ வின் கூட்டம் மருதானை டவர் பகுதியிலும் இடம்பெறவுள்ளன. தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க வின் கடைசி பிரசாரக் கூட்டம் நுகே கொடையிலும், நாமல் ராஜபக்ச வின் கூட்டம் கெஸ்பெவ பகுதியிலும் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

## மணமகன் தேவை

1989 இல் பிறந்த இந்து (K)
சித்திரை 4ம் பாதம்
மணமகளுக்கு மணமகன் தேவை.
Whatsapp:- **076 044 7942**

## தனியார் வகுப்புகள் (Personal Classes)

A/L மாணவர்களுக்கான **கடந்தகால வினாத்தாள்** (Past paper) வகுப்புகள் **இரசாயனவியல், பௌதிகவியல்** மற்றும் **உயிரியல்** தரம் 6 - O/L வரையிலான **விஞ்ஞானம், கணிதம்,** ICT என்பன ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிமூலம் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

(CS/56233) J-1

**076 677 4648, 074 075 9308**

## பெயர் மாற்றம்

தோப்புக்காடு காரைநகரில் வசிக்கும் **விக்னேஸ்வரன் நவலெட்சுமி** ஆகிய நான் எனது பெயரை **விக்னேஸ்வரன் விஜயலெட்சுமி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **விக்னேஸ்வரன் விஜயலெட்சுமி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs.56230) (N-1)

**விக்னேஸ்வரன் விஜயலெட்சுமி**

## கனடாவில் நில அதிர்வு

கனடாவில் சக்திவாய்ந்த இரு நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன. பிரிட்டிஷ் கொலம்பியாவில் நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன என்று அந்த நாட்டு தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.
நில அதிர்வுகளால் அந்தப் பகுதியில் உள்ள கட்டடங்கள் சில பாதிப்புக்குள்ளாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 12 . 1932



மறைவு
15 . 09 . 2024

### வனஜா றிச்சேட்ஸ்

வடமராட்சி அல்வாயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட வனஜா றிச்சேட்ஸ் அவர்கள் கடந்த (15.09.2024) ஞாயிற்றுனக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - லிபியா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான றிச்சேட்ஸ் எமலிசன் - விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெபரட்ணம் றிச்சேட்ஸ் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் பளை மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், வெஸ்லி றிச்சேட்ஸ் (கனடா), சிலோஜினி (கனடா), பிறின்ஸ் றிச்சேட்ஸ் (UK), கிறிஸ்ரின் மாலினி (ஆசிரியை சென்ஜோன்ஸ் கல்லூரி), தர்ஷினி (ஆசிரியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஐரின் (கனடா), ஜோசப் (கனடா), விமலினி (UK), ஜெயசிங்கம் (பிரதேச சபை மானிப்பாய்) காலஞ்சென்ற தேவசேனன் ஆகியோரின் மாமியும், ஏட்றியன் றிச்சேட்ஸ் (கனடா), ஜெரேமியன் றிச்சேட்ஸ் (கனடா), திவ்யா (கனடா), ஜெரோமி (UK), ஜஸ்மின் (UK), ஜெனிபர் (ஏஞ்சல் சர்வதேச பாடசாலை), ஆன் ஆகியோரின் அன்புப் பாட்டியும், மதுஷா (கனடா), ஜோபல் (கனடா), நிஷாந்தன் (கனடா), டிலோஷன் (கனடா) ஆகியோரின் பேர மருமக்களும், அமுதனின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.09.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு இல 40 கோயில் வீதி ஒழுங்கை, சுண்டிக்குளியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
076 282 2904

(CS/56234) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 11 . 1960



மறைவு
15 . 09 . 2024

### இராஜரட்ணம் ஆனந்தகுமாரசாமி (ஜெயா)

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொட்டக்காடு வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் ஆனந்தகுமாரசாமி நேற்றுமுன்தினம் (15.09.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - கனகமணி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், செல்வமலர் (ராணி) அவர்களின் பாசமிகு கணவரும், ராகவன் (St John'S College) அவர்களின் பாசமிகு தந்தையும், ராதா, அப்பன், சுதா, கீதா, காலஞ்சென்ற தயா மற்றும் லதா, பாபு ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெகநாதன், மஞ்சு, செல்வம், கேதீஸ், சூரியா, ரவி, ஸ்ரீ, தவம், சிவம், சுகிர்தா, பத்மராஜா, கிருஸ்ணா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மலரகம்"
கொட்டக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
077 678 6952
077 615 3547

## மைக்கல் ஜாக்சனின் சகோதரர் மரணம்!

உலகப் புகழ்பெற்ற பாடகர் மைக்கல் ஜாக்சனின் சகோதரர்களில் ஒருவரான டிட்டோ ஜாக்சன் தனது 70 ஆவது வயதில் காலமானார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர் ஜாக்சன் 5 என்ற பாப் குழுவை உருவாக்கியவராவார்.
இது தொடர்பில் அவரது குடும்பத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எங்கள் அன்புக்குரிய தந்தை ராக் அண்ட் ரோல் ஹால் ஆஃப் ஃபேமர் டிட்டோ ஜாக்சன் இப்போது எங்களுடன் இல்லை என்பதை கனத்த இதயத்துடன் அறிவிக்கிறோம்." என்று தெரிவித்துள்ளனர்.
(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 03 . 1936



இறப்பு 13 . 09 . 2024

### மங்களம் மகேஸ்வரி

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், சாத்தனார் கலட்டி அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மங்களம் மகேஸ்வரி கடந்த 13.09.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாசிலாமணி - தையலாம்பாள் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் - குஞ்சம்மாள் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மங்களம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், குமாரசுந்தரம், நாகேஸ்வரி, விஜயசுந்தரம், சின்னராசா, சோதிநாயகி, லோகநாதன் மற்றும் இராஜேஸ்வரி, லோகநாயகி, ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மிருநாளினி (ஓய்வு நிலை ஆசிரியர், கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்), ரோகிணிதேவி (ஜெர்மனி), ஸ்ரீபாலன், லிங்கபாலன், மணிசேகரன் (ஓய்வுநிலை அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி), காலஞ் சென்ற சந்திரசேகரன், நளாயினி (பிரான்ஸ்), ஈஸ்வரன் (ஜெர்மனி), தயாளன் (பெல்ஜியம்), காலஞ்சென்ற யாழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சச்சிதானந்தசிவம், காலஞ்சென்ற சிவஸ்ரீ, விக்கினேஸ்வரி (ஓய்வுநிலை உப அதிபர், கிளி/ பன்னாங்கண்டி இ.த.க), சசிதாரமணி (ஆசிரியர் யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்), அகல்யா (யா/ கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்), பூபாலன் (பிரான்ஸ்), யசோதா(ஜெர்மனி), ராதிகா(பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், எழிலரசி -ஸ்ரீலிங்கேஸ்வரன் (பிரான்ஸ்), கோகிலன் - சிவனியா, வேனிலன், சௌந்தர்யா - நிர்மலன் (ஜெர்மனி), மிருதுளா - நிரோஜன் (ஜெர்மனி), ரிசாந்தினி, பகீஸ்வரி, விக்னேஷ், தீபிகா, தரண்யா, துஷாரா, தூயவன், வேந்துயன், வேந்தினி, டிலக்சன், தர்சிகன், நயனா, சந்துஜன், சதுர்ஷன், மதுஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், ஜியா, தியான், பராவிகா, நிலா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2024) செவ்வாய்க்கிழமை சாத்தனார் கலட்டி, அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்பு:
077 7111 730

தகவல்:
குடும்பத்தினர்.

# தேர்தல் வன்முறைகள் பாதகத்தை உண்டாக்கும்

தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்தப் போக்குகள் தொடருமானால், சுதந்திர மானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு அது பாதகமாக அமையும் என்று சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான பிரசாரம் அமைப்பு தெரிவித்துள்ளது. அச்சுறுத்தல், அரசியல் கட்சி ஆதரவாளர்களைத் தாக்குதல் மற்றும் கட்சி அலுவலகங்களுக்கு சேதம் விளைவித்தல் போன்ற சம்பவங்களில் பெரும்பாலானவை பதிவாகியுள்ளன. ஜனாதிபதி வேட்பாளர்களை அவமதிக்கும் வகையில் சமூக ஊடகங்களில் பகிரப்படும் பதிவுகள் அதிகரித்து வருவதாக அவதானிக்கப்படுகிறது. இந்தப் போக்குகள் தொடருமானால், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு அது பாதகமாக அமையலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

சிவமயம்

குருதேவர் திருவடி வாழ்க

19 ஆவது ஜீவசமாதி தினம்

ஜனனம்
நூற்றியோராவது ஜனனம்
21.06.1923

ஜீவசமாதி
17.09.2005



19 வது ஜீவசமாதி தினம்
2024 புரட்டாதி பூரணை 2024-09-17 செவ்வாய்க்கிழமை

### அத்வைத பிரம்ம ஞான வித்தகர் தவத்திரு சர்வானந்த சுவாமிகள்

(இயற்பெயர் - கந்தையா ஆறுமுகம்)


இலங்கைத் திருநாட்டின் வடபால் தென்மராட்சி சாவகச்சேரியில் சிவ பக்தர்களான திரு.திருமதி கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் தவப்பயனாக திரு.கந்தையா ஆறுமுகம் அவர்கள் 1923.06.21ம் திகதி ஜனனமானார், தனது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் தொடர்ந்து சாவகச்சேரி கிராம நீதிமன்றத்தில் குமாஸ்தாவாக கடமையாற்றி வந்தார். பூலோக வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து பிரம்ம சூத்திரம், பகவத் கீதை, உபநிடதம், திருக்குறள், சைவ சித்தாந்தம் மற்றும் வேதாந்த நூல்களை ஆர்வமாக கற்றதன் பயனாக ஈழத்துச் சித்தர் பரம்பரையில் கடையில் சுவாமிகளிடம் குருசீட வழியில் வந்த அத்வைத ஞான வித்தகர் பிரம்மஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளிடம் யோகத்தினை பயின்று ஞான தீட்சையினை 1959ம் ஆண்டு கார்த்திகை சர்வாலய தீப நன்னாளில் பெற்று தீட்சை நாமமாக சர்வானந்த சுவாமிகள் என பெயர் சூட்டப்பட்டார். அட்டமா சித்திகளும் கைவரப் பெற்று சித்தராக பல ஞான சீடர்களை உருவாக்கி புரட்டாதி பூரணை நன்னாளில் ஜீவசமாதி அடைந்தார். ஜீவசமாதி தினம் 17.09.2024 செவ்வாய்க்கிழமை ஸ்ரீமத் சர்வானந்த சுவாமிகள் குருபீடத்தில் கொண்டாடப்படுகிறது. ஈழத்துச் சித்தர்கள், முனிவர்களுக்கும், ரிஷிகளுக்கும் தேவார திருமுறை பாடியருளிய நாயன்மார்களுக்கும், ஒப்பானவர்கள், நாமும் அவர்களின் வழி நின்று ஞானம் பெறுவோமாக.

ஸ்ரீமத் சர்வானந்த சுவாமிகள் குருபீடம் - வவுனியா
தொ.பே.இல 077 840 0974

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## வேலாயுதம் பாலசிங்கம்



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (18.09.2024) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அமரர் வேலாயுதம் பாலசிங்கம் அவர்களின் மறைவு 19.06.2024 நெஞ்சம் மறக்கவில்லை. அன்னமிட்டு அரவணைத்த கரம் தனையும் அன்புதனை புகட்டிய குரல்தனையும் மைத்துனர் சொல்லமுடியாத நினைவுகளாய் வாட்டுகிறது. நேர்வழி கொண்ட பார்வை உங்களிடத்தில் இருந்து கற்றுக்கொண்டேன். உங்கள் இதயத்தில் இருந்து வரும் சொற்களையும் கற்றுக் கொண்டேன். இறுதிவரை தலை குனியாது வாழ்ந்த வாழ்க்கைதனை இப்படித்தான் வாழ வேண்டும் என உணர்ந்தேன்.

இவ்வுலகில் பலர் இருக்கிறார்கள். ஆனால், இவ் உலகில் அறிவை அளவிடுபவர் யாருமில்லை. இந்த ஆத்மா தனக்கான இடத்தை அடைந்து விட்டது என்ற உணர்வில் உங்கள் ஆத்மா எல்லாம் வல்ல பாலகாளி அம்மன் பாதங்களில் உரித்தாகட்டும்.

மலர்வு
09.02.1947

உதிர்வு
19.08.2024


இல.42, ஈச்சமோட்டை வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0762978905, 021 222 6438

தகவல்:
வேலாயுதம் சிவமூர்த்தி (மைத்துனர்)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு
18
09
1945



இறப்பு
14
09
2024

### அந்தோனிப்பிள்ளை நேசரத்தினம்

ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பிரபல முறிவு நோவு வைத்தியர் பொன்னையா சமத்தர் தங்கராசம் ஆகியோரின் அன்பு மகன் அந்தோனிப்பிள்ளை நேசரத்தினம் கடந்த 14.09.2024 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சமத்தர் குணரெட்ணம், கனகரட்ணம் மற்றும் மேரி (லண்டன்), நவமணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி யோகராணி குணரெட்ணம் (லண்டன்), திருமதி லலிதா கனரட்ணம், காலஞ்சென்ற லோறன்ஸ் மற்றும் அமலதாஸ் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மக்கள் பார்வைக்காக வைற் கவுஸ் (White House) மலர்ச்சாலையில் இன்று (17.09.2024) செவ்வாய்க்கிழமை மாலை 2.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை வைக்கப்பட்டு, நாளை (18.09.2024) புதன்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை ஒட்டகப்புலத்தில் உள்ள சமத்தர் வாசாவில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலய சேமக்காலையில் அமைந்துள்ள குடும்ப கல்லறையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர் சார்பில்
நவமணி அமலதாஸ்

# வாக்களிப்பு தெளிவூட்டல் நடவடிக்கை ஆரம்பிப்பு!

*தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பு சுட்டிக்காட்டு*

**கொழும்பு, செப். 17**



**வாக்களிக்கும் முறை தொடர்பிலான விழிப்புணர் வூட்டும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
விசேட தேவையுடையோர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் போது இன்னொருவரை அழைத்துச் செல்லமுடியும் . இதற்கான விடயதானங்களை கிராம அலுவலர் ஊடாகப் பெறலாம்.

முதற்தடவையாக வாக்களிக்கவிருக்கும் இளைஞர் யுவதிகளுக் கான வாக்களிக்கும் முறை தொடர்பிலான தெளிவூட்டல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலும் பொலநறுவை, அநுராதபுரம் மற்றும் கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் போது கொண்டு செல்லக் கூடிய ஆவணங்கள் தொடர்பிலும் விழிப்புணர்வூட்டப்பட்டு வருகிறது. இம்முறைத் தேர்தலில் ஒருவர் 50 வீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெறாத பட்சத்தில் இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் எண்ணப்படும் முறைகள் தொடர்பாகவும் பல விரிவான தெளிவூட்டல்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன - என்றார். (ச)

## குருதிக்கொடை முகாம் நாளை

யாழ்ப்பாணம், செப். 17
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் முன்னெடுக்கும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை09 மணி முதல் மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குருதிக்கொடை முகாமில் ஆர்வலர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச–66)

## மரண அறிவித்தல்



மண்ணில்
20.09.1944

விண்ணில்
15.09.2024

### கணபதிப்பிள்ளை அம்பிகாபதி

வேலணை கிழக்கு 1ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அம்பிகாபதி அவர்கள் கடந்த 15.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் பாசமிகு கணவரும், சிவதாஸ், சிவநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அஜந்தா, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மிதுசன், மிதுசியா, அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும், இரத்தினபூபதி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற குகபாலன் ஆகியோரின் சகோதரனும், ஜெகராசசேகரம், காலஞ்சென்ற அம்பலவாணர், காலஞ்சென்ற தங்கம்மா, விஜயரட்ணம், காலஞ்சென்ற மதியாபரணம், பத்மாவதி, மணிமேகலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 434 3240
077 844 8665

(CS 1128) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சஜித்துக்கே...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இலங்கைத்தமிழரசுக்கட்சியின்தலைவர்மாவை. சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், கட்சியின் பதில் செயலர் ப.சத்தியலிங்கம், மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் சரவணபவன், கட்சியின் உபதலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் பங்கேற்ற கலந்துரையாடல் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு அறிக்கையை வாசித்த மாவை.சோ.சேனாதிராசா,

பிரதான வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கையில், புதிய அரசமைப்பு உருவாக்குதலும் ஏற்கனவே அரசமைப்பில் உள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறையாக்குவதுமாகும். ஒற்றையாட்சி மற்றும் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமைஏற்றுக்கொள்ளமுடியாதனவாகும். அதற்குப் பதிலாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பின் மூலம் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்பது பிரதானமாகும்.

முக்கியமாக இவ்விடயங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருடன் நேரடியாக பேச்சுகள் இடம்பெற்றன. தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ்ப் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு இணைப்பாட்சி அடிப்படையிலான சமஷ்டிக் கட்டமைப்பில் முழுமையான தன்னாட்சி சம்பந்தமாகத் தொடர்ந்து போராடி வந்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும், புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் பொருட்டு தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தீர்வுக்கான பிரேரணை முன்வைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்கள் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்துடனும் மலையக தமிழர்களுடன் இணைந்து செயற்படுதல் வேண்டும். 13ஆவது அரசியல் திருத்தம் அரசமைப்பின் ஒற்றையாட்சிக்குட்பட்டது. இதனை அரசியல் தீர்வாக எம்மால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். இருப்பினும் தமிழினத்தின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை அடையும் வரை இந்திய அரசின் நட்புறவுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நடைமுறையிலிருக்கும் மாகாண அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

2002 ஆம் ஆண்டு டிசெம்பரில் ஏற்பட்ட ஒஸ்லோ உடன்பாட்டில் சில அடிப்படைக் கோட்பாடுகளின் மீது இணக்கம் காணப்பட்டது. அக்கோட்பாடு பின்வருமாறு அமைந்தது. இந்த வரலாற்று நிகழ்வு இன்றும் பரிசீலனைக்குரியது. 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல் என்பதாகும். சர்வதேச நியமங்களின் படியும், சர்வதேச சாசனங்களின் படியும் தமிழர்களாகிய நாங்கள் தனிச்சிறப்புமிக்க மக்கள் குழாமாவோம். ஒருமக்கள் குழாமான நாங்கள் பேரினவாதத்தின் பிடிக்கு ஆட்படாது கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும், சுதந்திரமாகவும், அச்சமின்றியும் நாட்டின் ஏனைய மக்களுடன் சமத்துவமுள்ள மக்களாக வாழ விரும்புகிறோம்.

இறையாண்மை என்பது மக்களிடமே உண்டு அரசிடம் அல்ல என்பதை நாம் வலியுறுத்துகிறோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்தபின் எங்களால் சமர்ப்பிக்கப்படும் அரசமைப்புக்கான அறிக்கையில் குறிப்பிடப்படும் தமிழ்த்தேசிய இனத்துக்கான அரசியல் தீர்வை அடைவதற்கும், தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கும் தீர்வுகாண வெற்றிபெறும் ஜனாதிபதியுடனும் அரசுடனும் வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்போம். தமிழ்த்தேச மக்கள் அரசியல் தீர்வைத் தீர்மானிப்பதிலும் அந்த இலட்சியத்தை அடைவதற்கும் இடர்களோ முரண்பாடுகளோ ஏற்படாமல் நல்லெண்ணத்துடன், ஒற்றுமை உணர்வுடன் தேர்தலின் போதும், எதிர்காலத்திலும் ஒன்றாக நின்று உழைப்போம் எனத் திடமான தீர்மானத்தைக் கொண்டிருக்கிறோம்.

இந்த நோக்கத்தை நாடளாவிய ரீதியில் செயற்படுத்துவதற்கென நாம் கடந்த காலத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் எமது பெரும் பங்களிப்பை வழங்கி இருந்தோம். ஆனால் பெரும் ஏமாற்றங்களும், வெறுப்பும், வேதனைகளுமே எஞ்சியுள்ளன. இப்போதைய ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எம்மால் பரிசீலிக்கப்பட்ட மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் எதுவும் எமது அடிப்படை அரசியல் கோரிக்கைகளை முழுமையாக உள்ளடக்கவில்லை என்பதைக் கருத்தில் கொள்கிறோம். இந்த விஞ்ஞாபனங்களின் அடிப்படையில் எமது தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் என்ற எமது அடிப்படைக் கோட்பாடுகளில் எந்தவித விட்டுக்கொடுப்பும் இல்லாத வகையில் ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் விஞ்ஞாபனம் ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு திருப்தியாகக் காணப்படுகின்றது. எனவே, ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பின் போது ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென்ற எமது கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்திற்கு அமைவாக வாக்காளர்கள் உரியவாறு தங்கள் வாக்கை அவருக்கு வழங்க வேண்டும் - என்றார். (அ-ஒ-110)

## ஜனாஸா...

முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தொற்று பரவிய காலத்தில் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதா எரிப்பதா என்கின்ற பிரச்சினையின் போதும், முஸ்லிம் மக்களுக்காக அவர்களுடைய கலாசார, மத உரிமை என்பனவற்றுக்காக ஐக்கிய மக்கள் சக்தி முன்நின்றது. தேசியத் தலைவர்கள் என்று கூறிக்கொள்கின்ற ரணிலுக்கும் அநுரவுக்கும் அன்று இதுகுறித்துக் கதைப்பதற்கு முதுகெலும்பு இருக்கவில்லை.

அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்துக் கொண்ட ஒரேதரப்பு ஐக்கிய மக்கள் கூட்டணியாகும். சிங்கள, முஸ்லிம், மலே என்று பல பிரிவுகள் காட்டாமல் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டு, மக்களை வெற்றி பெறச் செய்வதற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வழங்கப்பட்ட [illegible] அதிகமான ஆதர[illegible] கேட்டுக் கொள்கிறேன்.

பால்பண்ணையாளர்களின் மேய்ச்சல் நிலங்கள் குறித்து காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வையும், விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு 50 கிலோ கிராம் உரமூடை ஒன்றை ஐயாயிரம் ரூபாவுக்கும், மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் எரிபொருள் நிவாரணத்தையும் வழங்குவோம் - என்றார். (அ-ஒ-இ)

## தமிழரசின்...

ஆறு பேரைக் கொண்டு இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் உயர் மட்டக் குழுவில், ஐந்து பேர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலைப்பாட்டில் இருந்தார்கள். அது தொடர்பாக ஓர் அறிக்கையும் எழுதப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாகவே இருந்தது.

மத்திய குழுவில் கடந்த முதலாம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானம் பிழை என நான் எழுத்து மூலமாகவும் வழங்கி இருக்கிறேன். நான் ஒரு தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற ரீதியில் எழுத்து மூலமாக அறிவித்துவிட்டு தான் பிரிட்டன் சென்றிருந்தேன். 6 திகதி நான் மீளவும் இலங்கைக்குத் திரும்புவேன். ஏழாம் திகதி வரை கூட்டத்தை வைக்கவேண்டாம் எனக் கூறியிருந்தேன்.

அவ்வாறு கூட்டங்கள் வைத்தாலும் தீர்மானங்கள் எடுக்கப்படாது என்று பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் எனக்கு உறுதி மொழியையும் தந்திருந்தார்.

தற்போதைய தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராஜாவை 26ஆம் திகதி சந்தித்துப் பேசுகின்ற போது நாங்கள் தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றமாட்டோம் சில விடயங்கள் தொடர்பாக பேச இருக்கிறோம் எனத் தெரிவித்திருந்தார். இவ்வாறிருக்கையில், மத்திய குழுவில் அவசர அவசரமாக யாருடைய தேவைக்காகத் தீர்மானம் மேற்கொண்டனர். அதுவும் சஜித்தை ஆதரிப்பது என்று தீர்மானித்தனர்.

இது கூர்ணர்வற்ற ஒரு முடிவு. இதனை நான் எதிர்க்கிறேன். நாங்கள் ஒரு பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்பது எனது தெளிவான நிலைப்பாடு. ஆதலால், இன்றையதினமும் (நேற்று) என் முடிவைப் பதிவுசெய்துள்ளேன் - என்றார். (அ-ம-110)

## திசைகாட்டி...

வாக்களிப்பது பரிகாரமாக அமையாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு நெருக்கடியில் இருக்கும் போது ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பது ஆரம்பமுதலே ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையாக உள்ளது. அதனை நான் கடைப்பிடித்து வருகின்றேன். நாட்டை வெற்றிபெற வைப்பதற்கு என்னுடன் ஒன்றிணைவதே தீர்வு. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய பதவி விலகியபோதும், அந்தக் கட்சியைத் சேர்ந்த பெரும்பான்மையானோர் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்துக்கு பங்களித்தனர் -என்றார். (அ-ஒ-இ)

## மந்துவில்...

[illegible]னர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 24 அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் 25ஆவது நினைவேந்தலே நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. உயிர்நீத்தவர்களின் திருவுருவப் படங்களுக்கு, உயிர்நீத்தவர்களின் உறவுகள் மலர்மாலை அணிவித்து, ஈகைச்சுடரேற்றி, மலர்தூவி தமது அஞ்சலிகளைச் செலுத்தினார்கள். (அ-ம-இ)

## ஈழத்...

எல்லோருக்கும் தெரியும். அதற்குப் பின்னர் எந்தப் பிரதமரும் பதவிக்கு வரவில்லையா? ஏன் அவர்கள் கச்சதீவை மீட்கவில்லை. இலங்கைத் தமிழர்களைக் கொல்ல இந்தியப் பிரதமர்கள் பல கோடிகளை வட்டியில்லாக் கடனாக கொட்டிக் கொடுத்துள்ளனர்.

பா.ஜ.க 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சியில் உள்ளது. கச்சத்தீவை மீட்கும் நடவடிக்கையை ஏன் இதுவரை எடுக்கவில்லை. நம் காலடியிலுள்ள இலங்கை என்ற சிறு நாட்டிடம் இந்தியா கைகட்டி நிற்பது எவ்வளவு கேவலம்? தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை தடுக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுவே, குஜராத், பிஹார், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநில மீனவர்கள் என்றால் மத்திய அரசு சும்மாவிடுமா?

பாகிஸ்தான் பகை நாடாக இருந்தாலும், மீனவர்களைக் கைது மட்டுமே செய்கிறது. ஆனால் இலங்கை, 850 மீனவர்களைக் கொன்று குவித்துள்ளது. இந்தியாவின் மீது பயமின்றி இலங்கை மீனவர்களைக் கொல்கின்றது. கொஞ்சம் காத்திருங்கள். மீனவர்கள் பிரச்சினைக்கு முடிவு கட்டுகிறோம் - என்றார். (அ-ம-இ)

## இலங்கை...

கடலோரக் காவற்படையால் மண்டபம் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். காற்றின் வேகம் காரணமாக தாம் திசைமாறி இந்தியக் கடற்பரப்புக்குள் நுழைந்துவிட்டதாக முதற்கட்ட விசாரணையின்போது மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும், விசாரணைகளின் பின்னரே ஏனைய விடயங்கள் தொடர்பில் தெரியவரும் எனவும் கரையோரக் காவற்படையினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-100)

## 13 வயதுச்...

இணைய விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு, சிறுவனின் தந்தை திறன்பேசியைக் கொடுக்காததையடுத்தே அந்தச் சிறுவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளதாக மரண விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ-ம-27-20-26)

## தவறான...

நெடுந்தீவுப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நெடுந்தீவுப் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

(அ-ம-66-20-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் மீது ஹவுத்தி தாக்குதல்

ஜெருசலேம், செப்.17

இஸ்ரேல் மீது ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல் மேற்கொண்டதில் இஸ்ரேலின் மோடியின் ரயில் நிலையத்தில் சிறுபாதிப்பும் பென் ஷபென் வனப்பகுதியில் தீ விபத்தும் ஏற்பட்டுள்ளது.

ஏமனிலிருந்து ஹைப்பர் சோனிக் ஏவுகணை ஏவப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் வான்பரப்புக்குள் வந்த ஏவுகணையை இஸ்ரேலின் ஏவுகணை தடுப்பு அமைப்பு தாக்கிய போதிலும் ஏவுகணையின் பாகங்கள் வெடித்து சிதறியுள்ளன. இந்த ஏவுகணைத் தாக்குதலின் போது காயமோ, உயிரிழப்புகளோ பதிவாகவில்லையென சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். (எ-இ)

# அநுர - சஜித் ஆலோசனைக்கு ஐ.எம்.எப். அங்கீகாரமில்லை

ரணில் நேற்றுத் தெரிவிப்பு



**கொழும்பு, செப். 17**

**சஜித் மற்றும் அநுரவின் ஆலோசனைகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் இல்லை. எனது அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்துக்கே ஆதரவு உள்ளது.**

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை வரலாற்றில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்காக ஐ.எம்.எப். வேலைத்திட்டத்தின் நோக்கங்களை அடைவது மிகவும் முக்கியமானது என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. மேலும் பொருளாதார சீர்திருத்தங்களை தொடர்ந்து செயற்படுத்துவது அவசியம். அதாவது நான் தொடங்கிய திட்டத்தை தொடர வேண்டும். எனவே இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல என்னால் மட்டுமே முடியும்.

'அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முடிவை இலங்கை மக்களே எடுக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் பார்வையில், இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளதை நாம் கண்டோம். இலங்கை தனது வரலாற்றில் சந்தித்த மிக மோசமான நெருக்கடியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு இந்த வேலைத்திட்டத்தின் மூலம் பெற்ற வெற்றியை பாதுகாப்பது மிகவும் முக்கியமானது' என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

சஜித்தோ அல்லது அநுரவோ சர்வதேச நிதியத்தின் ஆதரவைப் பெறமாட்டார்கள். அந்த ஆதரவு எங்கள் திட்டத்துக்கு உள்ளது. எனவே இவர்களது பொய்களில் சிக்கி இரவு விழுந்த குழியில் பகல் விழப் போகிறோமா என்பதை மக்கள் முடிவு செய்ய வேண்டும் - என்றார். (ஒ-இ)

# படகு விபத்தில் 64 பேர் மரணம்

நைஜர், செப்.17

நைஜீரியாவின் வடமேற்கில் உள்ள ஜம்பாரா மாநிலத்தில் நடந்த படகு விபத்தில் 64 பேர் உயிரிழந்துள்ளனர்.

70 விவசாயிகளை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்த மரப்படகு கவிழ்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

உள்ளூர் அதிகாரிகள் உடனடியாக மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மூன்று மணிநேர தேடுதலின் பின்னர் ஆறுபேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான விபத்து இந்த பகுதியில் இடம்பெற்றமை இது இரண்டாவது தடவை என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். நாளாந்தம் 900 விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு கடல்மார்க்கமாக செல்கின்றனர். ஆனால் இரண்டு படகுகள் மாத்திரமே சேவையில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# அகதிகளை தடைசெய்ய கட்டுப்பாடுகள் இறுக்கம்!

பெர்லின், செப். 17

புலம்பெயரிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ஜேர்மனி இன்றுமுதல் பல்வேறு நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அத்துடன் எல்லைகளில் பாதுகாப்பும் கண்காணிப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தமிழரின்...

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

இன்னும் ஐந்து தினங்களில் ஒட்டுமொத்த வடக்கு - கிழக்கின் தமிழரும் ஒரு தேசமாக தம் உணர்வுகளை வெளிப்படுத்தத் தயாராகிவிட்டதை தமிழ்க் கிராமங்கள், நகரங்களிலிருந்து ஒருமித்து திரண்டெழும் உணர்வு வெளிப்பாடுகள் பறைசாற்றி நிற்கின்றன.

எமது எதிர்கால நல்வாழ்வுக்கு, எம் சவால்களை ஒருமித்து எதிர்கொண்டு வெற்றிகொள்ள எம் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் பயணத்தில் புதிய அத்தியாயத்தை எதிர்வரும் சனியன்று ஒட்டுமொத்தமாக தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு அதாவது சங்குச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் ஊடாக நிலைநாட்டுவோம்.

இதற்காக இதயசுத்தியான தமிழ்தேசிய பற்றுறுதியும் செயற்பாட்டு வினைத்திற னும் கொண்ட கட்சிகளைக் கடந்த மனிதர்களின் நிபுணத்துவ வழிபடுத்தலை வழங்கும் பொதுக்கட்டமைப்பு ஒன்று இயங்கும் வண்ணம் நமக்காக நாமே சங்குக்கு வாக்களிப்போம். தமிழராய் திரண்டு தனித்துவ மக்கள் குழுமமாக இத்தீவில் தலைநிமிர்வோம் - என்றுள்ளது. (அ-ம)

# மாலைதீவு -இந்தியா நட்புக்கரம்



புதுடில்லி, செப். 17

மாலைதீவு ஜனாதிபதி முகமது மொய்சு அரசுமுறைப் பயணமாக விரைவில் இந்தியா வரவுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவுடன் சமீப காலமாக எதிர்ப்புப் போக்கைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த மாலைதீவு அரசாங்கத்தின் நடவடிக்கையில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையிலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவுடன் முன்னர் நட்புப் பாராட்டிய நாடான மாலைதீவு கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், சீனாவுக்கு நெருக்கமான முகமது மொய்சு வெற்றி பெற்று ஆட்சியை தக்கவைத்துக்கொண்டார்.

பதவியேற்ற குறுகிய காலத்திலேயே, அவர் மாலைதீவில் இருந்த இந்திய இராணுவப் படையை வெளியேற்றினார். அவர்களை வெளியேற்றியதால், இந்தியா- மாலைதீவு இடையேயான உறவில் விரிசல் விழுந்தது.

இந்நிலையில், நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பிரதமராகப் பதவியேற்கும் நிகழ்ச்சிக்கு மாலைதீவு அதிபர் முகமது மொய்சுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் பதவியேற்பு விழாவில் முகமது மொய்சு கலந்துகொண்டார்.

அதையடுத்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், கடந்த மாதம் மாலைதீவு சென்றிருந்தார்.

இந்நிலையில் மாலைதீவு ஜனாதிபதி முகமது மொய்சு, முதல்முறையாக அரசுமுறைப் பயணமாக விரைவில் இந்தியா வரவுள்ளதாக அதிகாரபூர்வ தகவல் வெளியாகியுள்ளது. (ச)



# சிறீதரன் எம்.பி.யை சந்தித்தார் திலகராஜ்

யாழ்ப்பாணம், செப். 17

ஜனாதிபதி வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜ், யாழ்ப்பாணத்துக்கு நேற்று திங்கட்கிழமை வருகை தந்துள்ள நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் சிறிதரன் எம்.பியிடம் கையளித்தார். (ச-20)

வீடு வாடகைக்கு
நல்லூர் கோவிலில் இருந்து 300m தூரத்தில் நவீன வசதிகளுடன். கூடிய வீடு நாள் அடிப்படையில் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
071 443 2989
(CS/1357) J-1

இரண்டாம் மொழி சிங்கள வகுப்புகள்
2025 ம் ஆண்டு தரம் 6 மாணவர்களுக்கான 2ம் மொழி சிங்கள வகுப்புகள் ஆரம்பம்.
23.09.2024 திங்கட்கிழமை
மாலை 3.00 மணியளவில்.
இடம் - இலங்கை வேந்தன் திருமண மண்டப அருகில் நீராவியடியில்.
தொடர்புகளுக்கு:-
077 990 6867, 077 214 0220
(CS/56236) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.09. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org